# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை - 18

Scanned by CamScanner

# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

( பன்னாட்டுக் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு )

ISBN: 978-93-87865-06-8

தொகுதி – 3

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **ஆ. பாப்பி கமலா பாய்,** தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் **சி. அருள் மைக்கேல் செல்வி**

முனைவர் **இரா. டயானா கிறிஸ்டி**

முனைவர் **இரா. ஏஞ்சல்**

திருமதி **பா. தீவ்யா**

திருமதி **டே. ஆனி மரிய ஜான்சி**

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

Scanned by CamScanner

# பொருளடக்கம்

## காப்பியம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | திருமதி இலக்கியா, சோ. | இரட்சணிய மனோகரத்தில் அருள் வாழ்வியலுக்கான மனித மதிப்பீடுகள். | 1 |
| 2. | திருமதி சலோமி இராஜஸ்ரீகம், சே. | தேம்பாவணியில் மனித மதிப்பீடுகள் | 5 |
| 3. | திருமதி பிரியா, பா. | அருள்நிறை மரியம்மை காவியம் காட்டும் மனிதநெறிகள் | 8 |
| 4. | செல்வி மகேஸ்வரி, வே. | இரட்சணிய யாத்திரிகத்தில் மதிப்புகள் | 12 |
| 5. | மணிப்பிரியா, ரா. | நீர் வரம் அடைந்த படலம் வழி அறியலாகும் மதிப்பீடுகள் | 15 |
| 6. | வசுமதி, சி. | தேம்பாவணியில் நீர் வரம் அமைந்த படலம் | 18 |
| 7. | செல்வி விஷ்ணுபிரியா, சு. | சேதையோன் படலத்தில் இறைமாண்புகள் | 22 |
| 8. | ஜாஸ்மின் பிரியா, மா. | வளன் சனித்த படலத்தில் மனித மதிப்பீடுகள் | 27 |
| | | **சிற்றிலக்கியம்** | |
| 9. | முனைவர் அருள் மைக்கேல் செல்வி, சி. | கித்தேரியம்மாள் அம்மானை வழி அறியலாகும் வாழ்வியல் மதிப்பீடுகள். | 31 |
| 10. | அல்போன்ஸ் சிந்தியா, அ. | கித்தேரியம்மாளின் மனித மாண்புகள் | 35 |
| 11 | ஆனந்தி, க. | திருக்காவலூர் கலம்பகம் சுட்டும் வாழ்வியல் அறம் | 38 |
| 12. | திருமதி சரஸ்வதி, கு.செ. | கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் | 42 |
| 13. | முனைவர் சுஜா, ச.அ. | திருக்காவலூர் கலம்பகச் சிறப்பு | 46 |
| 14. | திருமதி திவ்யா, பி. | மடுமாதா அம்மானையில் குடும்பத்திற்கான மதிப்பீடுகள் | 50 |
| 15. | முனைவர் தேவ்மாலா, ஆ. | திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம் | 53 |
| 16. | முனைவர் ஹென்றி ஜுலியஸ், பெ. | கித்தேரியம்மாள் அம்மானையும் அறவியல் பேருண்மைகளும் | 57 |
| 17. | முனைவர் ஷர்மி, ஆ. | கிறித்துவ இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள் | 62 |


Scanned by CamScanner

# திருக்காவலூர் கலம்பகச் சிறப்பு

முனைவர் ச.அ. சுஜா
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

இத்தாலியில் பிறந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி எனும் வீரமாமுனிவர் (1680-1747) தமிழ் நாட்டிற்கு வந்து 37 ஆண்டுகள் இங்கேயே வாழ்ந்து தமிழுக்குப் பெருந்தொண்டாற்றினார். இலக்கியம், இலக்கணம், அகராதி, உரைநடை, மொழிபெயர்ப்பு என் எல்லாத்துறைகளிலும் தொண்டாற்றியவர். தமிழ்ப்பற்றும், தமிழ்ப் பண்பாடும் இவருடைய நூல்களில் சிறப்பாகக் காணப்பெறும். வீரமாமுனிவர் பற்றியும் அவருடைய படைப்புகள் குறித்தும் பலர் பாடியுள்ளனர். அவற்றுள் ஒரு பாடல் திருவள்ளுவரையும், வீரமாமுனிவரையும் ஒரு நிலையில் வைத்து,

"உண்ணுதல் உன்னினவை ஓதுதல் ஓதினவை
அன்னபடி யேவரைய ஓர் அறிஞர் - இன்னலடி
செய்ய ஒருவன் ஒரு வர்வீர மாமுனிவர்
ஐயர்அல் லால்வேறு இல்லை"

என்று சிறப்பித்துள்ளது. பல்கலைச் செல்வராகிய இவர் 'தைரியநாதர்' எனவும், 'வீரமாமுனிவர்' எனவும் அழைக்கப்பட்டார். 'மலர்களின் தந்தை' என்ற பெயரால் இவரது குருக்கள் இவரை அழைத்து வந்ததாகவும் கூறுவர் 'இஸ்மத் சந்யாசி' (உண்மைத்துறவி) எனச் சந்தா சாகிபு அழைத்துள்ளார். தேம்பாவணிக் காப்பியம், திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, அடைக்கல நாயகி மேல் வெண்கலிப்பா, அன்னை அழுங்கல் அந்தாதி ஆகியவை அடங்கிய திருப்பாவணியையும் எழுதினார். கித்தேரியம்மாள் அம்மானை இவரால் எழுதப்பட்டதே.

பரமார்த்தகுரு கதை, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் லுத்தேரினத்தார் இயல், பேதகமறுத்தல் போன்ற உரைநடை நூல்களும் தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தமிழிலக்கணம், கிளாவிஸ் போன்ற இலக்கண நூல்களும் எழுதியுள்ளார். திருக்குறளை (இன்பத்துப்பால் நீங்கலாக) இலத்தீனில் மொழிபெயர்த்துள்ளார். சதுரகராதி, தமிழ் - இலத்தீன் அகராதி, தமிழ்-போர்ச்சுக்கல் அகராதி ஆகியவற்றையும் உருவாக்கியவர். இவர் படைப்புகளில் ஒன்றான திருக்காவலூர்க்கலம்பகம் எனும் இலக்கியத்தின் சிறப்பு குறித்தும் கலம்பக உறுப்புகள் எவ்வாறு பொருத்தியுள்ளன என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கண விளக்கப் பாட்டியல் கலம்பகம் பற்றி உரைப்பது,

"ஒருபோகு வெண்பாக் கலித்துறை யுறமுன்
வருபுய மதங்கம்அம் மானை காலஞ்
சம்பிரதங் கார் தவங்குற மறம்பாண்
களிசித் திரங்கல் கைக்கிளை தூது
வண்டு தழைமேற் கொண்டெழு மூசல்
மடக்கு மருட்பா வஞ்சி விருத்தம்
வஞ்சி வஞ்சித்துறை வெண்டுறை மருவி
இடையிடை வெண்பாக் கலித்துறை நடைபெற்று
அந்தாதி மண்டலித்தாங் கலம் பகமே." (இல.விள., 812)

இம்முறையைப் பின்பற்றியே வீரமாமுனிவரும் திருக்காவலூர்க்கலம்பம் இயற்றியுள்ளார்.

காமங்கலந்து பாடும் கலம்பகத்திலேயே கடவுள் தன்மையாகிய ஏமங்கலந்து பாடும் இவரது ஆற்றலுக்கு இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஏலாக்குறிச்சி எனப்படும் திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அடைக்கல மாதாவின் பாட்டுடைத் தலைவியாகப் பெற்றொளிர்வது இந்நூல். இதுவரை தமிழில் தோன்றியுள்ள கலம்பகங்களில் இ'.தொன்றே பெண்பாற் கலம்பகமாகத் திகழ்வது.



Scanned by CamScanner